Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்க.:தா 25 (29.01.2003) புதன்கிழமை இதழ் : 120

நெருக்கடி நிலையை தீர்ப்பது தொடர்பாக ஹொவ்டே - தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பித்த இந்த முக்கிய கலந்துரையாடல் 11.30 மணி வரை நீடித்தது. தற்போதுள்ள சூழ்நிலையில் நெருக்கடிகளைத் தணித்தல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து நீண்டநேரம் உரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன், தங்கன், செல்வி, ஜோர்ஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜெனரல் புறூவ் ஹொவ்டேயுடன் அவரது ஊடகச் செயலாளர் பீற்றர் நோலனும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய ஜெனரல் புறூவ் ஹொவ்டே, நெருக்கடி மேல் நெருக்கடியாகவுள்ள இந்தச் சூழ் நிலையில்- நெருக்கடிகளைச் சுமுகமாகத் தீர்ப்பது குறித்து உடனடியாகத் தீர்வு கண்டு விட முடியாது. படிப்படியாகவே தீர்க்கமுடியும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதங்கள் களைந்தாலே மீள் குடியமர்வு

நம்பியாரின் யோசனை புலிகளால் நிராகரிப்பு

விண்ணாணம் விநாசியர்

பெயரில மட்டும் நம்பிக்கையை வைச்சிருந்தவர் நம்பிறமாதிரி நடக்கயில்லைப் பாருங்கோ...

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்தார்

(நமது நிருபர்)

அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பான விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் கையளிக்கப்பட வேண்டும் என்ற வகையிலான எந்தவொரு நிபந்தனையையும் விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்திருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய ஜெனரல் சதீஸ் நம்பியாரின் முதற்கட்ட அறிக்கை தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஓய்வுபெற்ற இந்திய இராணுவ உயர் அதிகாரியான லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் முதற்கட்ட அறிக்கையில் வெளியான தகவல்களின் அடிப்படையில் அவர் இந்த நிராகரிப்பை முன்வைத்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

சதீஸ் நம்பியாரினால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் சில தவறான முற்கற்பிதத்துடன் உருவாக்கப்பட்டதால் அவை முற்றுமுழுதாக நிராகரிக்கப்படுகின்றன.

பொதுமக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டு அதனை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்துக்கொண்டு அதனூடாக அர்த்தப்படுத்தப்படும் விடயங்கள் முழுமையாக குழப்பத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

வீரம் விளைநிலம் அன்புடன் அழைக்கின்றது

மட்டு. பொலிஸார் அகற்றினர் மாணவர்கள் மீள நிறுவினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் வைக்கப்பட்டிருந்த, 'வீரம் விளைநிலம் அன்புடன் அழைக்கின்றது" என்று எழுதப்பட்டிருந்த பெயர்ப்பலகையை பொலிஸார் சேதப்படுத்தி அகற்றியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தினர்.

"வீரம் விளைநிலம் அன்புடன் அழைக்கின்றது" என்ற வாசகம் அடங்கிய பலகையை பொலிஸார் நேற்றுமுன்தினம் அகற்றியபோது, அதனைக் கண்ட பொதுமக்கள் அந்தப் பலகையை

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஜனவரி இரண்டாம் வாரத்தில் நடந்த இரகசிய விஜயம்

கொழும்பில் ரணிலைச் சந்தித்ததுடன் யாழ்ப்பாணமும் வந்தார் நம்பியார்!

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, இந்தியாவின் முன்னாள் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் கடந்த 13,14 ஆம் திகதிகளில் இலங்கைக்கு இரகசிய விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

கடந்த 13 ஆம் திகதி கொழும்பு வந்த லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்தார். இவர், குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து நேரில் ஆராய்ந்ததுடன் பலாலிப்படைத்தளத்தில் இடம்பெற்ற படை அதிகாரிகளுடனான சந்திப்பிலும் பங்குபற்றியிருந்தார்.

இவர், யாழ்.குடாநாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

கொழும்பு திரும்பிய சதீஸ் நம்பியார் மறுநாளான 14 ஆம்திகதி இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது தனது முதற்கட்ட அறிக்கை பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், நம்பியார் விரிவாகப் பேசியதாகவும் தெரியவருகின்றது .

இதேவேளை- ஊடகங்களும் அரசாங்கத் தரப்பும் தெரிவிப்பது போலன்றி, ஜெனரல் நம்பியார் மீண்டும் இலங்கைக்கு வரும் சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுவதாக அரசாங்கத்திற்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

பிரிட்டிஷ் வெளியுறவு செயலர் இன்று இலங்கை வருகிறார்

பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலர் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வந்து சேருவார்.

வெளியுறவுச் செயலர் மைக் ஓ ப்ரெயின்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரையும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்து சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி முக்கியமாக ஆராய இருக்கிறார்.

இரு நாடுகளுக்கும் பொதுவான விடயங்களிலும் இச் சந்திப்புக்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் பூரண ஆதரவு வழங்கும் என்று வெளியுறவுச் செயலர் (10 ஆம் பக்கம் பார்க்க)

துணைவேந்தர் பதவிக்கான தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான வாக்கெடுப்பு இன்று மாலை 2 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

அந்தியேஷ்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

எமது குடும்பத் தலைவர்

அமரர் பொன்னையா சித்திரவேலு

30.12.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தி யேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 29.1.2003 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"கெங்காதர வாசா"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி-539)

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்குச் சேவை செய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசியப் பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்குச் சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு அவை இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, யூக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

Engineering Assistant (Mechanical)

N.D.T Mechanical Engineering தேர்ச்சியுடன் தனியார்துறையில் குறைந்தது 5 வருடம் Fabrication workshop இல் வேலை செய்த அனுபவத்துடன் சுயமாகச் சிந்தித்து செயல்படுபவரும் வேலையாட்களைச் சிறந்த முறையில் வழிநடத்தும் ஆற்றலுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கணக்காளர் (Accountant)

சுயாதீனமாகச் சகல கணக்குப் புத்தகங்களையும் எழுதிக் கணக்காய்வுக்கு உட்படுத்தக்கூடிய ஆற்றலுடையவராக இருக்க வேண்டும். முகாமைத்துவத்திற்குத் தேவைப்படும் கணக்குத் தகவல்களைச் சீராகவும், தகுந்த நேரங்களிலும் வழங்கும் ஆற்றல் மிக அவசியமானது. ஆங்கிலத்தில் ஆற்றலுள்ளவர்களுக்கு (Fluency in English) முன்னுரிமை வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் துறையில் பகுதிச் சான்றிதழ்களுடன் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 10.02.2003.

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்,
கம்பனி லிமிட்டெட்.
இல.844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/532)

இன்றைய நாள் இனிய நாள்

29-01-2003 - புதன்கிழமை

மேடம் :-	பணவரவு, சிநேகிதரால் லாபம், குடும்பமகிழ்ச்சி, பொருட்சேதம்.
இடபம :-	காரியகேடு, கோபமிகுதி, வாக்குக்கலகம், அவமானம், மனக்கவலை.
மிதுனம் :-	தனதானிய நிறைவு, சௌபாக்கியம், இனசன கொண்டாட்டம், சந்தோஷம்.
கர்க்கடகம் :-	வயிறு, நெஞ்சில் ரோகம், காரியவிக்கினம், உறவினரால் கவலை.
சிங்கம் :-	தேகமெலிவு, காரியசித்தி, களஸ்திரசுகம், பொருள் வரவு, நற்கீர்த்தி.
கன்னி :-	புத்திரசுகம், களஸ்திரசுகம், தொழிற்சிறப்பு, நற்குணம், பிரயாணம்.

**பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்**

துலாம் :-	கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பணக்கஷ்டம், சிநேகித நன்மை, சோம்பல்.
விருச்சிகம் :-	காரியசித்தி, இல்லச்சிறப்பு, பூமி லாபம், நற்குணவிருத்தி, தனலாபம்.
தனு :-	வீண்பழிகேட்டல், வாக்குக்கலகம், குடும்ப மனஸ்தாபம், தேகசுகம்.
மகரம் :-	பெரியோர் மதிப்பு, உறவினர் வருகை, ஆரோக்கியம், களஸ்திர சுகம்.
கும்பம் :-	காரியத்தடை, சத்துருவெற்றி, உடனலக்குறைவு, வீண்பிரயாசை..
மீனம் :-	வாக்கு வசீகரம், பெரியோர் மதிப்பு, வாகனயோகம், குடும்ப சுகம்.

மத்திய கல்லூரியில் 'அங்குசம்' வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

'அங்குசம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று காலை 10 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறு விளம்பரம்

சமையலாள் தேவை

எமது ஸ்தாபனத்தின் இயக்குனர்களின் வதிவிடத்தைப் பராமரிப்பதற்கும் சமையல் வேலை செய்வதற்கும் அனுபவம் வாய்ந்த சமையலாள் தேவை. மேல்நாட்டவருக்கு ஏற்ப சமையல் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோ மோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட், இல. 844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-531)

ஓட்டோவும் சாரதியும் தேவை

எமது ஸ்தாபனத்தில் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை, வாடகைக்கு வேலை செய்யக்கூடிய Auto (Tri - Show) வும், சாரதியும் தேவை. மாதாந்த அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும். தொடர்பு: இயக்குநர், புறோ மோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-535)

பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

எமது ஸ்தாபன வளாகத்தி லும் இயக்குனர்களின் வதிவிடத்திலுமுள்ள பூந்தோட்டங்களை வடிவமைத்துப் பராமரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை. அனுபவங்களின் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோமோட் டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-536)

அலுவலகப் பணியாள் (பியோன்) தேவை

எமது அலுவலகத்துக்கு க.பொ.த. சா/த தேர்ச்சிபெற்ற, சுயமாக சுறுசுறுப்பாக வேலைசெய்யக்கூடிய 20 வயதுக்குட்பட்ட பணியாள் (பியோன்) தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோமோட் டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-537)

மணமகள் தேவை

உயர் இந்து கௌரவ குடும்பம், சதயம், 8 இல் செவ்வாய் (பாவம் குறைவு), 43 வயது, சொந்த நிறுவனம் நடாத்திவரும் விவாகரத்துப் பெற்றவருக்கு தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு உட்பட சகல விபரங்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி. விளம்பர இல.08, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (218)

விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் மேற்கு, கட்டுடை, இல.77, நான்கு பக்கமும் சுற்று மதில் உடைய 8 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சுகுணராஜா, கரந்தன், நீர்வேலி. (219)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த

வசீகரா

10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

லோறன்ஸ், குணால், உஷா நடித்த

அற்புதம்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி

TOMB RAIDER (சி-397)

ஓட்டோவுக்குள் சிக்கிய இளைஞன் ஆஸ்பத்திரியில் நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் சிக்கிக் காயமடைந்த இளைஞர், யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

கடந்த 14 ஆம் திகதியன்று இரவு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக பிக்கப் வாகனம் ஒன்றுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக ஓட்டோ ஒன்று முயற்சித்தவேளை, அது சரிந்து வீழ்ந்தது.

இதனால் ஓட்டோவுக்குள் சிக்கிய தவராசா தினேஸ்ராஜ் (வயது21) என்ற இளைஞன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் நேற்று வைத்தியசாலையில் மரணமானார்.

விவசாய அபிவிருத்திக்கு வாகனங்கள்

'நிகொட்' அமைப்பு மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்ட விவசாய அபிவிருத்திக்குத் தேவையான வாகனங்களை வழங்கவுள்ளது. இன்று காலை 10 மணிக்கு திருமலை சிறுவர் பூங்காவில் இவ்வாகனங்களை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி, இன்று பி.ப.2.00 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட்செல்வி இக்னேசியா சூசைப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் முதன்மை விருந்தினராக நெடுந்தீவு உதவிக் கல்விப்பணிப்பாளர் க.அரசரத்தினம் கலந்துகொள்கிறார். (113)

கோழி விற்பனை

புறொயிலர், பிறிமா, கல்பேட்ஸ் போன்றன விற்பனைக்கு உண்டு.

சுத்தம் செய்வது இலவசம்.

தொடர்பு: **வதனா களஞ்சியம்** (செந்தில் கடை),
நந்தாவில் அம்மன் கோவிலடி முன்பாக,
கொக்குவில்.

(சி-538)

2003 - 2004 இற்கான புதிய பிரிவுகள்

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்
(யாழ்ப்பாணம்/ பேராதனை)

GAQ, 1st in Com, B.A(I), B.A (II) & B.Com

விரிவுரைகள் ஆரம்பம்: 02.02.2003

*ஆங்கில இலக்கியம், மொழியியல் உட்பட சகல பாடங்களுக்குமான விரிவுரைகள்.
*நூலக வசதி உண்டு.
*பல்கலைக்கழக பதிவுகள் எம்மால் செய்துதரப்படும்.

INQUIRIES/REGISTRATION
DIRECTOR

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, Hospital Road, Jaffna

(சி-533)

புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவை செய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாக திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு அவை இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், துருக்கி, யூக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கடைச்சல் இயந்திர இயக்குநர் (லெத்மன் - Lathe Man)
2. மில்லிங்மெசின் இயக்குநர் (Milling Machine Operator)
3. தகட்டு வேலைத் தொழிலாளி (Sheet Metal worker / Fabricator)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாக சிந்தித்து செயல்படும் ஆற்றலுள்ள சுறுசுறுப்பு மிக்க குறைந்தது 10 வருட அனுபவமுள்ள தரமான வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர் தேவை.

நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10-02-2003

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்.
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-534)

தமிழர் உரிமையை நிலைநாட்டும் வழக்குகளுக்கு நிதி தாருங்கள்!

தமிழகத்திலிருந்து பழ.நெடுமாறன் வேண்டுகோள்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதானோரை விடுதலை செய்யவும், தமிழர் உரிமைகளுக்கு எதிரான வழக்குகளைத் தள்ளுபடி செய்யக்கோரியும் - இந்தியாவில் நடாத்தப்பட்டுவரும் வழக்குகளுக்கு பெரும் பொருட் செலவாவதால் நீதியை நிலைநிறுத்தும் முயற்சிக்குத் தமிழ் உணர்வு படைத்த தலைவர்களும், தமிழர் அமைப்புக்களும், ஜனநாயகத்தில் அக்கறை உள்ளவர்களும் முன்வந்து வழக்கு நிதிக்கு உதவுமாறு - தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'தமிழர்களுக்கு வேண்டுகோள்' எனனும் தலைப்பில் வெளியாகியுள்ள இந்த வேண்டுகோளின் முழு விபரமும் வருமாறு,

நானும், எங்கள் தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர்கள் முனைவர் சுப.வீரபாண்டியன், கா.பரந்தாமன் மற்றும் பாவாணன், மருத்துவர் தாயப்பன் ஆகியோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினோம் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொடிய 'பொடா' சட்டத்தின் கீழ் (Prevention of Terrorism Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம்.

தமிழர் தேசிய இயக்கம் சட்டவிரோதமான இயக்கம் எனத் தடை செய்யப்பட்டுள்ளது. என்னை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்பட்ட தென் செய்திப் பத்திரிகை அலுவலகத்தைத் தமிழக அரசு பூட்டிச் சீல் வைத்துள்ளது. இதன் காரணமாக அந்தப் பத்திரிகை வெளியிடுவது தடைப்பட்டுள்ளது. இந்த அடுக்கடுக்கான அடக்குமுறைகளுக்கு எதிராகக் கீழ்க் கண்ட பல வழக்குகளைத் தொடுத்துள்ளோம்.

1.விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து வழக்கு.

2.பொடா சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட கைதானவர்களை விடுவிக்க தனித்தனி வழக்குகள்.

3. பொடா சட்டம் மனித உரிமைகளுக்கு எதிரானது, அது செல்லாது என அறிவிக்கக் கோரும் வழக்கு.

4. தமிழர் தேசிய இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து வழக்கு.

5. தென் செய்தி அலுவலகம் சீல் வைக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு.

சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு இந்த வழக்குகளை நடத்தி நீதியை நிலைநிறுத்த பெரும் பொருள் செலவாகும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

தமிழ் உணர்வு படைத்தவர்களும், தமிழர் அமைப்புகளும், ஜனநாயகத்தில் அக்கறை உள்ளவர்களும் முன்வந்து வழக்கு நிதிக்குத் தாராளமாக உதவும்படி அன்புரிமையுடன் வேண்டிக் கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - நிதி அனுப்ப வேண்டிய முகவரியாக - பேராசிரியர் பா.கல்யாணி, 7, கல்லூரிச்சாலை, திண்டிவனம் 604001 என்னும் முகவரியும் பணவிடை அஞ்சல், காசோலை, வரைவோலை அனுப்புவோர், பா.கல்யாணி என்ற பெயரில் மட்டுமே அனுப்பும்படியும் அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினைத்திறமைகாண் பரீட்சை ஏப்பிரலில்

(மானிப்பாய்)

அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை, அங்கீகரிக்கப்பட்டுள்ள சேவைகள் மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு 11 அ பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும், சுருக்கெழுத்தாளர் சேவையின் தரம் 11 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்குமான வினைத் திறமைகாண் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெற இருப்பதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

(100)

புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் வழக்கிலிருந்து நெடுமாறன் விடுதலை!

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் பொடா சட்டத்தின் கீழ் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த பழ.நெடுமாறன் அவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு இவர் பொடா சட்டத்தின் கீழ் தமிழகக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

போதிய ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லையென்று நீதிபதி இவ்வழக்கிலிருந்து பழ.நெடுமாறனை விடுவித்திருந்தார்.

விபச்சார விடுதிகளாக இயங்கிய சீன மருத்துவ மையங்கள்!

கொழும்பில் பொலிஸ் சுற்றிவளைப்பு

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் - சீன மருத்துவ நிலையங்கள் என்னும் பெயரில் விபச்சார விடுதிகள் நடாத்தப்பட்டு வந்தமை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் சீன மூலிகைகள் மருத்துவ நிலையங்கள் கொழும்பில் பல இடங்களிலும் இயங்கி வந்தன.

ஆனால் - வெள்ளவத்தை, நாரஹென்பிட்டிய, கிருலப்பனை பகுதிகளில் இந்த நிலையங்களில் நடைபெற்ற பொலிஸாரின் திடீர்ச் சுற்றிவளைப்பில் - இவை விபச்சார நிலையங்களாகவே இயங்கி வந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடுதிகளிலிருந்து - சீனாவைச் சேர்ந்த பெண்கள் கொழும்பிலுள்ள பல உயர்தர நட்சத்திர விடுதிகளுக்கும் விபச்சாரம் செய்வதற்கு அனுப்பப்பட்டு வந்ததாகவும் தெரியவருகின்றது.

மூதூரில் மீனவர் மரணமான சம்பவம் ; கடற்படையினரைக் கைது செய்ய உத்தரவு!

கடந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி மூதூர் இறங்குதுறைக்கு அருகே, கடற்படையினரின் படகு மோதி மீனவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக திருகோணமலைத் தளக் கடற்படை கட்டளை அதிகாரி கொமாண்டர் நிலவீன மூதூர் நீதிபதி முன்பாக விசாரணைக்காக நிறுத்தப்பட்டார்.

மீனவரின் உயிரிழப்புக்குக் காரணமானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கடற்படைச் சிப்பாய்களைக் கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு உதவ வேண்டும் என்று கொமாண்டர் நிலவீனவுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த நீதிமன்றத் தவணையின் போது, மீனவர் உயிரிழப்பதற்குக் காரணமான படையினரையும், படகையும் நீதிமன்றுக்குக் கொண்டு வருமாறு உத்தரவிட்டபோதும், அவர்கள் வராததினால் சம்பந்தப்பட்ட தளக்கட்டளை அதிகாரியை நீதிமன்றில் சமுகமளிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவுக்கமையவே கொமாண்டர் நிலவீன நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

வட-கிழக்கு தமிழர் தாயகமல்ல பௌத்த விகாரைகளே சாட்சி

சிஹல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் தமிழர்களின் தாயகம் அல்ல என்பதை நிரூபிப்பதற்கான சிறந்த சான்றுகளாக இருப்பவை அப்பிரதேசங்களிலுள்ள பௌத்தவிகாரைகள்தான் என சிஹல உறுமய தெரிவித்திருக்கின்றது.

இந்த பௌத்த விகாரைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கை என்ற பெயரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பௌத்த விகாரைகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அரசாங்கத்துக்கு முறைப்பாடு செய்தபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சிஹல உறுமய மேலும் தெரிவித்துள்ளது.

கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"ஈழத்தமிழர் விடுதலை வரலாற்றில் இணைப்பாட்சி" எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் க.ஈழவேந்தன் கருத்துரை வழங்கவுள்ளார்.

துரித மீள்குடியமர்வுத் திட்டத்தில் பெண்கள், சிறுவருக்கு விசேட கவனிப்பு!

யு.என்.எச்.சி.ஆர். வதிவிடப் பிரதிநிதி விளக்கம்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்நத மக்களைத் துரித மீளக்குடியமர்த்தும் திட்டத்திற்கான பணிகள் விரைவில் ஆரம்பமாகுமென்றும் - இதன் போது பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களும் தேவைகளும் விசேடமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுமெனவும் - அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிரெண்டா பரேற்றா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது -

இடம்பெயர்ந்த மக்களுக்கான தேவைகளை இனங்காணும் குழுக்களின் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதும் - அடுத்த கட்டமாக, இடம் பெயர்ந்தவர்களைப் பாதுகாக்கவும், கௌரவமாகவும் மீள் குடியமர்த்துவதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல் ஆரம்பமாகும்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே படையினர் நிலைகொண்டுள்ள இடங்கள் பற்றிய முழுமையான தரவுகள் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைக்கு வரும் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரும்போது அவர்களது உடல் ரீதியான, சட்டரீதியான, பொருள் ரீதியான பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவேண்டுமென்பதில் யு.என்.எச்.சி.ஆர். அக்கறையாக உள்ளது என்றும் பிரெண்டா பரேற்றா மேலும் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.கச்சேரியில் நடந்த துரித மீள்குடியேற்றல் கூட்டம்

குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர் வேண்டும்; உலகத் தமிழர் பேரமைப்பு அறைகூவல்!

தூய தமிழைப் பேணுவோம் எனவும் பிரகடனம்

தமிழ்ப் பெயரையே தாங்குமாறும், குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயரையே இடுமாறும் கோரித் தூய தமிழ் ஆளவேண்டுமென - சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த பொங்கல் விழா நாளன்று உலகத் தமிழர் பேரமைப்பின் விழாக் கூட்டத்தில் அனைவரும் கூடி இத் தீர்மானத்தை அங்கீகரித்ததாக பேரமைப்பின் செயலாளர் நாயகம் மருத்துவர் செ.நெ.தெய்வநாயகம் தெரிவித்தார்.

பழ.நெடுமாறனைத் தலைவராகவும், முனைவர் க.ப.அறவாணன், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முனைவர் வி.கோவிந்தசாமி, லண்டனைச் சேர்ந்த மருத்துவர் இந்திரகுமார் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவர் பொன். சத்தியநாதனை செயலாளராகவும் கொண்டு இவ்வமைப்பு சென்னை தியாகராய நகரில் இயங்கி வருகிறது.

'உலகத் தமிழ் மக்களுக்கு ஓர் அறைகூவல்' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள இந்தப் பேரமைப்பின் பொங்கல் தீர்மானம் கீழ்வருமாறு சொல்கிறது.

தமிழ்ப் பெயரே தாங்குங்கள், குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயரே இடுங்கள், பேச்சில் திருந்திய தமிழ் உலவட்டும், எழுத்தில் தூய தமிழே ஆளட்டும், வழக்கற்ற தமிழ்ச் சொற்கள் வழக்காற்றுப்படல் வேண்டும். அறிவியல் மற்றும் வாழ்வியல் கருத்துச் சொற்களுக்கு பொருந்தும் தமிழ்ப் பெயர்கள் புனைதல் வேண்டும். பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற வாழ்க்கை நிகழ்ச்சிகள் சமுதாய விழாச் சடங்குகளுடன் கோயில் வழிபாடுகள் அனைத்தும் தமிழிலேயே நடந்திடல் வேண்டும். தமிழனின் அடையாளமாகிய தமிழை முழுமையாக மீட்போம். பண்பு காப்போம். உலகுக்கு வழிகாட்டுவோம் என அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர் :ஆ.மதுமிதா
முகவரி:ஆனந்தமகால், வதிரி, கரவெட்டி.

மூன்றாவது அகவையில்

பெயர் : ற.தினேஷ்காந்
முகவரி: அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்

மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு மகாவித்தியால யத்தின் வரருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி சா. கிருஸ்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு முதன்மை விருந் தினராக 'நாட்டிய வேள்' கலைஞர் வேல் ஆனந்தன் கலந்து கொள் கிறார்.

(113)

ஈவினையில் சட்டவிரோத மின் பாவனை

(ஈவினை)

ஈவினைப் பிரதேசத்தில் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்துள் ளமையால், -அப்பகுதியில் உரிய முறையில் மினன்னிணைப்புப் பெற் றவர்கள் தமது மின்சாதனங்களைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இரவு வேளைகளில் சில விவசாயிகள் சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்று, மோட்டார்க ளைப் பயன்படுத்தி நீர்பாய்ச்சி வரு வதாகவும் அப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர்.

(96)

வடமராட்சி கிழக்கில் இலவச கணினி கற்கை நெறி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத் தில் வசிக்கும் மாணவர்களின் தக வல் தொழில்நுட்ப அறிவினை வளர்க் கும் நோக்குடன் வடமராட்சிச் சுற்றுப் புறச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தின ரால் இலவசமாகக் கணினிக் கற் கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கற்கை நெறிக்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்திய டைந்த இருபாலாரும் விண்ணப் பிக்கலாம். விண்ணப்பங்களை மேற் படி சங்கத்திலும், வடமராட்சி தென் னிந்தியத் திருச்சபை வளாகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என அறி விக்கப்பட்டுள்ளது.

(100)

நீரிழிவு நோய் DIABETES

பகுதி 3

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்.

நீரிழிவு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுட் சில வருமாறு:-

1. பரம்பரை வழியாக ஏற்படலாம்.
2. வைரசுக்கள் சதையியைப் பாதிப்பதால் ஏற்படலாம்.
3. மருந்துகளால் சதையி பாதிக்கப்படுவதால் ஏற்படலாம்.
4. அளவுக்கு அதிகமான காபோவைதரேற்று, கொழுப்புப் பொருட்களை உண்பதால் ஏற்படலாம்.
5. அதிக மன உழைச்சல், நெருக்கீடுகள் போன்றவற்றால் ஏற்படலாம்.
6. உடல் உழைப்பற்ற வாழ்க்கையினால் ஏற்படலாம்.
7. உயரத்திற்கேற்ப உடல் நிறையை மட்டுப்படுத்தாததால் ஏற்படலாம்.
8. விபத்துக்களால் சதையி பாதிக்கப்படுவதால் ஏற்படலாம்.
9. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி ஏதோ ஒரு காரணத்தினால் திசைமாறிச் சதையியைத் தாக்குவதால் ஏற்படலாம்.
10. வேறு நோய்களால் ஏற்படலாம்.
11. நாய் மலத்தில் காணப்படும் இழையங்களைக் குடையும் புழுக்கள் (VISCERAL LARVA MIGRANTS) அசுத்தமான உணவுகளின் மூலம் தொற்றிச் சதையியைக் குடைந்து சென்று, சதையியைச் சேதப்படுத்துவதாலும் இப்புழு சதையியினூடாகச் செல்லும்போது, சதையியினுள் இறந்து, அதில் படிவுகள் படிவதாலும் ஏற்படலாம்.
12. உடலில் தெளிக்கப்படும் (SPRAY), நறுமணம் கமழி (COLON), உணவுப் பண்டங்களை அழகுபடுத்தப் பயன்படுத்தப்படும் நிறமூட்டி போன்றவற்றில் தீங்கு விளைவிக்கத்தக்க இரசாயனப்பொருட்கள் இருக்கலாம். இவ்வாறான பொருட்களை உபயோகிப்பதனாலும் ஏற்படலாம்.

பெரும்பாலானோருக்கு, அவர்களது இன்றைய தவறான உணவுப் பழக்கமும் உடல் உழைப்பின்மையுமே நீரிழிவை ஏற்படுத்தி வருவதால், அதுபற்றிச் சற்று விரிவாக நோக்குவோம். தாய் தந்தையர் அல்லது அவர்களின் முன்தோன்றல்கள் சலரோகிகளாக இருந்தால் அல்லது இருந்திருந்தால் அக்குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளின் சதையி எளிதில் பாதிப்படையக் கூடியதாக இருக்கும். கட்டாயமாகப் பாதிக்கப்படும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத போதிலும், அதிக காபோவைதரேற்றுக் கொண்ட உணவுகளையும் அதிக கொழுப்புள்ள உணவுகளையும் உண்டு, அதனால் உடல் எடையும் மிகுந்திருந்தால், பிறப்பிலேயே பலவீனமான சதையி எளிதில் பாதிக்கப்படும் எனலாம். இவர்கள் உடல் உழைப்பு அல்லது அப்பியாசம் செய்யவேண்டும். அன்றேல் நீரிழிவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

தொடரும்...

நீங்காத நினைவலையில் ஆண்டு 10



மலர்வு
26-04-1926

மறைவு
19-01-1993

அமரர் இ.ச.பேரம்பலம்

(E.S.P) அவர்கள்

காரைநகர் - வாரிவளவு

திதி - 29-01-2003

கண்ணியத்துடன் தொழில் நிறுவி கலங்கரையாய் வழிகாட்டி
அமைதியாய் உயர்வு பெற்று
E.S.P எனும் நாமம் எங்கும் பரந்து நிற்க!
பயம் அகற்றி இனிய ஒளிதந்து - எங்கள்
வாழ்வுக்கு வழிகாட்டிய - ஐயாவே!
இருள் சூழ்ந்த வீட்டினில் ஒளிதந்து
புகழ் பூத்த யாழ்நகரில் தனித்துவமாக்கியவரே!
புகழ் பெற்ற இலட்சியங்கள் புன்னகையுடன்
நின் முன்னே துலங்குதையா!
ஓம் சாந்தி!

மணிஓசை
383, கோவில் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்,
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
50,52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-217)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்

மாணவர் மலர்

வினாத்தாள் 1

❖ வரைவிலக்கணம் (INTERPRETATION)

✶ பின்வரும் உருவப்படம் நகரங்கள் சிலவற்றைத் தொடுக்கும் வீதிகளின் ஒரு தொகுதியைத் தருகிறது. நகரங்கள் ஆங்கில எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.



1. D யிலிருந்து E யை நோக்கிச் செல்லும் வீதி எத்தனை கிலோமீற்றர் நீளம் ஆகும். (.............)
2. A இற்கும் B இற்கும் இடையிலான தூரமும் E இற்கும் F இற்கும் இடையிலான தூரமும் சமமானவையா? (.............)
3. அஜித் A யிலிருந்து B வழியாக E இற்குப் பயணம் செய்கிறான். சரத் A யிலிருந்து D வழியாக E இற்குப் பயணம் செய்கிறான். கூடிய தூரம் பிரயாணம் செய்ய வேண்டி இருப்பவர் யார்? (.............)
4. ஒருவர் A யிலிருந்து புறப்பட்டு முறையே D, C, B எனும் நகரங்களினூடாக E யை வந்து அடைவாராயின், அவர் பிரயாணம் செய்த மொத்தத் தூரம் எத்தனை கிலோ மீற்றர் ஆகும்? (.............)

❖ தொடர்புகளைக் காணல் (SEEING RELATIONSHIPS)

✶ கீழே தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருவத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1.  (1) நீர் (2) ஆறு (3) மழை (........)

2.  (1) வெயில் (2) குளிர் (3) மழை (........)

3. (1) வீடு (2) மரம் (3) கடை (........)

❖ அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
(FOLLOWING INSTRUCTIONS)

✶ இவ்வுருவை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமையச் செயலாற்றுக.



(1) பூச்சாடியைச் சுற்றி வட்டமிடுக.
(2) கதவின் நடுப்பகுதியில் புள்ளடியிடுக.
(3) கூடையைச் சுற்றிக் கட்டமிடுக.
(4) குடைகளின் கைப்பிடிகளைக் கோட்டினால் இணைக்குக.
(5) பந்துகளின் கீழ்க் கோடிடுக
(6) பெட்டிகளின் மீது 1,2,3 என இலக்கமிடுக.

❖ அவதானிப்பு
(OBSERVATION)

✶ கீழே தரப்பட்டுள்ள படங்களுள் பிழையான படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. 

2. 

3. 

4. 

❖ தகவல்களின் ஒழுங்கமைப்பு
(ORGANISATION OF INFORMATION)

✶ கீழே தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பம் முதல் இறுதி வரையான 5 நிலைகளைப் படிமுறையில் காட்டும் ஒரு விடை உள்ளது. அச்சரியான விடையைத் தெரிவு செய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. (1) செடி → மரம் → விதை → பூ → காய்
(2) விதை → செடி → மரம் → காய் → பூ
(3) விதை → செடி → மரம் → பூ → காய் (...............)

2. (1) நெற்பயிர் → நெல் → அரிசி → மா → பலகாரம்
(2) தேங்காய் → தேங்காய்ப்பால் → தேங்காய்ப்பூ → வினாகிரி → அச்சாறு
(3) சீமெந்து → பூச்சாடி → பூ → பழம் → பணம்
(...............)

❖ பிரசினங்களைத் தீர்த்தல் (PROBLEM SOLVING)

✶ சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை கூடுவர். ஒழுங்குமுறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு. குணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு.குணசேகரனின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்.
(1) ஜனவரி (2) பெப்ரவரி (3) நவம்பர்

2. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதைவிட இரு மடங்காக இருக்கும்?
(1) 3 வருடங்களில் (2) 4 வருடங்களில் (3) 8 வருடங்களில்.

❖ தர்க்கித்தல் (REASONING)

✶ சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. "எமது விளையாட்டுக் குழுவில் உள்ள எல்லா வீரர்களும் உயரமானவர்கள் 'தயாபரன் உயரமானவன்' தயாபரன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்" என்னும் கூற்று
(1) சரியானது (2) பிழையானது (3) சரியாகக் கூறமுடியாது.

அடுத்த வாரம் முதல் வினாப்பத்திரம் II இன் வினாக்கள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்பது பற்றியும், பல்வேறு வகையான வினா வகைகள் பற்றியும் நோக்குவோம்.

தொடரும்.

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.

அன்பார்ந்த பெற்றோர்களே!

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகத் தற்போது நாம் வெளியிட்டுவரும் மாதிரி வினாத் தாள் வழிகாட்டல் குறிப்பு தொடர்பாக உங்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆலோசனைகளை,
அபிப்பிராயங்களை
மாணவர் மலர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

- பொறுப்பாசிரியர்.

க.பொ.த. உயர்தரம்

மாதிரி வினாத்தாள்

பௌதிகவியல்



பகுதி I

நேரம்: ஒரு மணி

01. மேற்பரப்பிழுவிசையின் பரிமாணங்கள்
1) LT^{-2} 2) Nm^{-1} 3) L^{-1}
4) MT^{-2} 5) MT^{-1}

02. செறிவு $10^{-12}\ Wm^{-2}$ஐ உடைய ஒலியானது 0 டெசிபெல் மட்டத்தை உடையதென வரையறுக்கப்படுகின்றது. ஒலிச்செறிவு மட்டம் 40dB இற்குரிய ஒலியின் செறிவு
1) $10^{8}\ Wm^{-2}$ 2) $10^{-10}\ Wm^{-2}$
3) $10^{-8}\ Wm^{-2}$ 4) $10\ Wm^{-2}$
5) $10^{-12}\ Wm^{-2}$

03. வானொலிப்பெட்டியொன்று சங்கீதமொன்றை 710 KHz இல் பெற்றுக் கொள்கின்றது. வானொலி ஒலிபரப்பு நிலையம் எவ் அலைநீளத்துடன் இச்சங்கீத சமிக்ஞையை அனுப்புகின்றது
1) 422.5 m 2) 400 m 3) 10^{6} m
4) 500.5 m 5) 405.5 m

04. 

சீரான தட்டொன்றில் வெட்டி எடுக்கப்பட்ட F என்னும் எழுத்தின் புவியீர்ப்பு மையத்தின் ஆள்கூறு 0 புள்ளி தொடர்பாக
1) (-3.5, -5) 2) (-3.5, -4.5)
3) (-4, -5) 4) (-4, -4)
5) (-4, -1)

05. வெப்பக் கதிர்ப்புகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
a) அவை மின்காந்த அலையாகும்.
b) அவை எல்லாம் சுயாதீன வெளியில் ஒரே கதியுடன் செல்கின்றன.
c) வெப்பநிலை குறைவாக உள்ள பொருள் காலும் கதிர்ப்பு சிவப்பு நிற கதிருக்குரிய அலைநீளத்திற்கு அண்மியதாகும். இவற்றுள் சரியானது/சரியானவை.
1) A மட்டும் 2) A, B மட்டும் 3) A, C மட்டும்
4) B, C மட்டும் 5) A, B, C எல்லாம்

06. ஒரே வகையான வேறுபட்ட வெப்பமானிகளைக் கொண்டு ஒரு உடலின் வெப்பநிலை அளக்கப்பட்டபோது வேறுபட்ட அளவீடுகளைக் கொடுக்கின்றன. அளவீடுகளின் வித்தியாசம் மிகவும் குறைவாக இருக்கும் வெப்பமானிகள்
1) கண்ணாடியுள் இரச வெப்பமானிகள்
2) வாயு வெப்பமானிகள்
3) வெப்பவிணைகள்
4) ஈருலோக வெப்பமானிகள்
5) தீமானிகள்

07. 

கொள்ளளவியொன்றின் குறுக்கேயான அழுத்தமாறலுடன் ஏற்றம் மாறுவதை வரைபு காட்டுகின்றது. 5V அழுத்த வேறுபாடு கொள்ளளவி தட்டுக்களுக்கிடையில் உள்ளபோது கொள்ளளவியில் சேமிக்கப்பட்டுள்ள சக்தி μJ இல்
1) 25 2) 50
3) 200 4) 100
5) 250

08. புவியின் திணிவைப் போல் இருமடங்கு திணிவு கொண்டதும் புவியின் ஆரையின் 3 மடங்கு ஆரை கொண்டதுமான கோள் ஒன்றின் மேற்பரப்பில் 1kg திணிவொன்றின் நிறை
1) 2.2 இல் 2) 13.5 இல் 3) 4.4 இல்
4.) 6.6 r 5) 1.35 N

09. சவர்க்கார குமிழி ஒன்றிற்கு எதிர் ஏற்றம் கொடுக்கப்பட்டது. சவர்க்கார குமிழியின் ஆரை
1) குறையும் 2) அதிகரிக்கும்
3) மாறாது 4) குறைந்து கூடும்
5) எதிர்வு கூறத் தரவுகள் போதாது.

10. 

பாரமான அணுக்கரு ஒன்றிற்கு அண்மையாக α துணிக்கை ஒன்றின் பாதையாக இருக்க முடியாதது
1) A 2) B 3) C 4) D 5) E

11. 

உருவிற் காணப்படும் கதவம் எதற்குச் சமவலுவானது.
1) NAND 2) OR 3) AND 4) NOT 5) NOR

12. நிலையான அவதானி ஒருவரை நோக்கி 4 m/s கதியுடன் ஒரு புகையிரதம் அணுகுகிறது. இன்னுமொரு புகையிரதம அதே கதியுடன் அவதானியை விலத்திச் செல்கிறது. இரு புகையிரதங்களும் 240 HZ மீடிறனுடன் சீழ்க்கையை எழுப்புகின்றன. அவதானி உணரும் அடிப்பு மீடிறன் (வளியில் ஒலியின் கதி 320 m/s)
1) 6 2) 3 3) 0 4) 2 5.) 1

13. T1, T2 தனி வெப்பநிலைகளில் இலட்சிய வாயுவொன்றில் ஒலியின் கதிகள் V1, V2 ஆகும். அவ் வெப்பநிலைகளில் மூலக்கூறுகளின் இடைவர்க்க கதிகள் முறையே v1, v2 ஆகுமெனின்,
1) v2= v1 (V2/V1) 2) v2= v1 (V1/V2)
3) $v2=v1 (\sqrt{V2/V1})$ 4) $v2= v1\sqrt{(V1/V2)}$
5) v2=V1 (V2/v1)

14. ஒரு முனை மூடிய குழாயொன்று முதலாம் மேற்றொனியில் பரிவுறுகின்றபோது குழாயினுள்ளே சம இடைத் தூரத்தில் அமைந்த 4 புள்ளிகளின் அதிர்வை சரியாகக் காட்டுவது.



1) 2) 3) 4) 5)

15. நுணுக்குக் காட்டியொன்றின் நீளம் அதிகரிக்கப்படுகின்ற போது அதன் உருப்பெருக்கவலு,
1) குறையும் 2) அதிகரிக்கும்
3) மாறாது 4) கூறமுடியாது
5) மேலுள்ளவற்றுள் எதுவுமல்ல

16. பாய்மம் ஒன்றில் இயங்கும் கோளம் ஒன்றின் மீது தாக்கும் பிசுக்குமை விசை,
A) கோளத்தின் வேகத்திற்கு நேரடி விகிதசமம்.
B) கோளத்தின் திணிவிற்கு நேரடி விகிதசமம்.
C) கோளத்தின் ஆரைக்கு நேர்மாறு விகிதசமம்.
1) A மட்டும் 2) B மட்டும் 3) A, B மட்டும்
4) B, C மட்டும் 5) A, B, C எல்லாம்

17. ஒளி ஊடுகடத்தும் பதார்த்தமொன்று காட்டப்பட்டவாறு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நிற ஒளிக்கற்றையொன்றின் சமாந்தரக் கற்றை ஒன்று காட்டப்பட்டவாறு படுகின்றது. C யினதின் தடிப்பு B யினதின் தடிப்பின் இருமடங்காகும். A யிலுள்ள அலைகளின் எண்ணிக்கையும் AC சேர்மானத்தில் உள்ள அலைகளின் எண்ணிக்கையும் சமனாகும் எனின், B யின் முறிவுச்சுட்டி.



1) 1.33 2) 1.7 3) 1.6 4) 1.4 5) 1.5

18. சாதாரண கண்ணொன்றின் வில்லையின் உயர் குவியத்தூரம் 2.5 cm ஆகும். அண்மைப்புள்ளி 25 cm எனின், கண்வில்லையின் இழிவு குவியத்தூரம் ஏறத்தாழ,
1) 1.5 cm 2) 1.8 cm 3) 2.0 cm
4) 2.3 cm 5) 2.5 cm

19. உறைநிலை ஏரியொன்றில் உள்ள பனிக்கட்டியின் தடிப்பு 5 cm. வளி வெப்பநிலை -20°c பனிக்கட்டியின் தடிப்பு இருமடங்காவதற்கு எடுக்கும் நேரம் யாது? (பனிக்கட்டியின் வெப்பக்கடத்தாறு $5x10^{-4}$ k cal °c m.s, பனிக்கட்டியின் அடர்த்தி 920 Kgm^{-3}, பனிக்கட்டியின் உருகலின் மறைவெப்பம் 80 K cal/kg)
1) 6 h 30 min. 2) 7 hrs 3) 8 hrs
4) 7 h 40 min. 5) 6 hrs

20. அடைத்த அறையொன்றிலுள்ள தொடர்பு ஈரப்பதனை
(A) அறையிலுள்ள நீராவியைக் குறைப்பதன் மூலம்
(B) அறையிலுள்ள வெப்பநிலையைக் கூட்டுவதன் மூலம்.
(C) அறையின் கனவளவைக் கூட்டுவதன் மூலம் குறைக்கலாம்.
1) A மட்டும் உண்மையானது
2) B மட்டும் உண்மையானது
3) A, B ஆகிய மட்டும் உண்மையானது.
4) B, C ஆகியன மட்டும் உண்மையானது.
5) A, B, C எல்லாம் உண்மை.

21. r Ω/m தடையையுடைய கம்பியொன்று காட்டப்பட்டவாறு வளைக்கப்பட்டுள்ளது. AB இற்கிடையிலுள்ள சமவலுத் தடை.



1) $(6/\pi) r$ 2) $2\pi r/ (\pi+1)$
3) $6\pi r / (16+3\pi)$ 4) $3\pi r/(10+3\pi)$
5) $3\pi r/ (16+3\pi)$

22. L நீளமுடைய 3 சர்வசமனான செங்கட்டிகள் காட்டப்பட்டவாறு அடுக்கப்பட்டுள்ளன. சமநிலை குழம்பாமல் இருக்கக்கூடிய Y இன் உயர் பெறுமதி



1) L/2 2) L/4 3) 3L/4
4) L 5) L/8

23. காட்டப்பட்டுள்ளது ஒப்பமான கப்பி மேலாக இரு திணிவுகள் நீட்டமுடியாத இழையொன்றில் இணைக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றன. தராசு 1Kg திணிவுடைய தெனின் வாசிப்பு.



1) 6 Kg
2) 6 Kg லும் குறைவு
3) 6 Kg லும் அதிகம்
4) 6 Kg லும் கூடவோ குறையவோ இருக்கலாம்.

24. குற்றி A ஒப்பமான தரையிலுள்ளது. 0.2 Kg திணிவு கொண்ட குற்றி B, A யின் மீதுள்ளது. A, B இற்கிடையிலான நிலையியல் உராய்வுக் குணகம் 0.15. B வழுக்காமல் இருக்குமாறு A இழுக்கவேண்டிய விசை F இனது இழிவுப் பெறுமானம்,



1) 1.764 N 2) 0.1764 N 3) 0.3 N 4) 0 5) 17.6 N

25. படம் (a)இல் காட்டியவாறுள்ள கம்பியொன்றின் மையத்தில் காந்தப்பாயவடர்த்தி B. படம் (b) இல் காட்டியவாறு கம்பி வளைக்கப்பட்டால் மையத்தில் காந்தபாயவடர்த்தி.



1) 2Bo 2) Bo/2 3) 4Bo 4) 0 5) Bo/4

26. 2 m நீளமுடைய 4 ஒரே மின்னோட்டம் காவும் கடத்தும் கம்பிகள் படத்திற்காட்டப்பட்டவாறு வளைக்கப்பட்டு ஒரே சீரான காந்தப் புலமுள்ள இடத்தினுள் வைக்கப்பட்டுள்ளன. பின்வருவனவற்றுள் சரியானது,



1) P இல் உள்ள இணை உயர்வானது
2) Q இல்
3) R இல்
4) S இல்
5) சம இணைகள் தொழிற்படும்

27. $^{12}_{6}C$ கருவொன்று சக்தி கூடிய நியூத்திரன் ஒன்றை உறிஞ்சுவதனால் β துணிக்கை ஒன்றை காலுகிறது இதனால் கிடைக்கும் விளையுள் கரு
(1) $^{14}_{7}N$ (2) $^{13}_{5}B$ (3) $^{13}_{7}N$ (4) $^{13}_{6}C$ (5) $^{13}_{7}C$

28. Ra இன் அரைஆயுட்காலம் 1,600 வருடங்கள். இதன் சாராசரி ஆயுள்,
1) 6200 Yrs 2) 4800 Yrs 3) 2309 Yrs
4) 4217 Yrs 5) 3200 Yrs

29. வானியல் தொலைகாட்டியொன்று தூர நட்சத்திரமொன்றுக்குக் குவியப்படுத்தப்பட்டுள்ளது. பார்வைத் துண்டிற்கும் பொருளிக்குமிடையிலான தூரம் 2.5 cm. பார்வைத் துண்டின் வலு 4D எனின், பின்வருவனவற்றுள் சரியானது,
1) கோண உருப்பெருக்கம் 90
2) கோண உருப்பெருக்கம் 10
3) பொருளியின் வலு 0.444 D
4) பொருளியின் குவியத்தூரம் 75 cm
5) கோண உருப்பெருக்கம் 45

30. பாவுகையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள மீள்தன்மை சீர்க்கம்பி ஒன்றின் கீழ் நுனியிலிருந்து திணிவொன்று தொங்கவிடப்பட்டுள்ளது. கம்பியின் விகிதசம எல்லை விஞ்சப்படவில்லையெனக் கொண்டு பின்வரும் கூற்றுக்களை கருதுக.
(A) கம்பியின் நீளம் இருமடங்காக்கப்பட்டால் கம்பியின் விகாரம் இருமடங்காகும்.
(B) கம்பியின் குறுக்கு வெட்டுப்பரப்பு இருமடங்காக்கப்பட்டால் கம்பியின் விகாரம் இருமடங்காகும்.
(C) தொங்கவிடப்பட்ட திணிவு இருமடங்காக்கப்படின் கம்பியின் விகாரம் இருமடங்காகும்.
மேலேயுள்ள கூற்றுக்களில் சரியானது/சரியானவை.
1) A மட்டும்
2) B மட்டும்
3) C மட்டும்
4) A, C மட்டும்
5) B, C மட்டும்

பொ. விஜயகுமாரன்,
யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.
- திருக்குறள்-

நமது நோக்கு

பசுமை வதம்!

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவற்றுள் இயற்கைச் சமனிலைக் குழப்பமும் முக்கியமானதொன்று.

கடந்த காலப் போர் நடவடிக்கைகள் - மக்களை அழித்ததும், கட்டடங்களைத் தகர்த்ததும், பொருளாதாரத்தைச் சிதைத்ததும் வெளிப்படையாகத் தெரிந்த பாதிப்புக்களென்றால் -

இயற்கைக்கு நேர்ந்த அழிவும் பாதிப்பும் ஓரளவு கண்ணுக்குத் தெரிந்தாலும் - நீண்டகாலப் பாதிப்புக்களாக, மறைமுகமாக இயற்கை வளங்கள் அடைந்திருக்கும் காயம் வலுவானதே என சூழலியலாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் - தென்மராட்சிப் பகுதியில் தலையிழந்து கருகிநிற்கும் தென்னைகளும், வன்னிப் பெருநிலப்பரப்பில் குண்டுச் சிதறல்களாலும், வெடிமருந்தின் தாக்கங்களினாலும் அழிந்திருக்கும் அழகிய காடுகளும் - ஏ-9 வீதி வழியே வரும் எவரது மனதையும் கலங்கச்செய்யும் பேரழிவுகளாகும்.

இவ்வளவு இருந்தும் - இயற்கை வளத்தைப் பாதுகாப்பதென்றே உறுதிபூண்டு சில அமைப்புக்களாவது இயங்கி வருவது - எமது இயற்கை வளம் காக்கப்படும் என்ற நம்பிக்கையைத் துளிர்விடச் செய்திருப்பதுடன், சூழல் காப்பாளர்களுக்கு மகிழ்ச்சியையும் தந்து வருகின்றது.

இந்தவகையில் அண்மையில் - வன்னிப் பெருநிலப் பரப்புக் காடுகளிலுள்ள வன விலங்குகளைக் காப்பதற்கும், தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு ஒழுங்கமைப்புக்களை அறிவித்துள்ளது.

வனவிலங்குகளின் அழிவு வீதம் அதிகரித்து வருவதால், வனவிலங்குகள் அழிந்துவிடக்கூடிய அபாயம் எழுந்துள்ளதால் - பௌதீகச் சமநிலை பாதிப்புறும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் வனவளப் பாதுகாப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்றிருந்த - உலகவங்கியின் தென்னாசியப் பகுதிக்கான உபதலைவர் மீகோ நிஷிமிசு - யுத்தம் அழித்த நிலையிலும் வன்னிப் பெருநிலப்பரப்பின் வயல்வெளிகள் பசுமை பூண்டு மலர்ந்திருந்ததை மிகவும் மகிழ்ச்யுடன் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் தளராத உறுதியை அந்தப் பசுமை தனக்கு எடுத்துச் சொன்னதாக அவர் புளகாங்கிதமடைந்திருந்தார்.

இந்தவகையில் - ஒருபுறம் எமது இயற்கை வளம் காக்கப்படுவதற்கான முயற்சிகள் பற்றியதாயும், எமது மக்களின் தளராத உறுதி தொடர்பாகவும் - சிலாகிக்கப்படக்கூடியதாக இருக்கும்போது -

மறுபுறத்தில் - யாழ்.மாவட்டத்தில் நடந்துவரும் சில செயற்பாடுகள் இயற்கை வளக் காப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்து வருவதைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பசுமையான, பயன் தரும் மரங்கள் தறிக்கப்படுவதும், புதிய கட்டடங்கள் அமைக்கிறோம் - புனரமைப்புச் செய்கிறோம் என்ற வகையில் வீடுகளிலுள்ள மரங்களை அழித்து விடுவதும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.

அண்மையில் - இளவாலைப் பகுதியில் இவ்வாறு நடந்த நிகழ்வொன்று - சூழல் பாதுகாப்புச் சங்கத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டதும் குறிப்படத்தக்கது.

அதேவேளை - குடாநாட்டிலுள்ள பொது இடங்கள் மற்றும் வயல் நிலங்களில் சட்டவிரோதமாக மணல் அகழும் வேலைகளும் அதிகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மீசாலை, மட்டுவில், வரணி, கச்சாய், அரியாலை, வல்லிபுரம், கரவெட்டி, வல்லை, மணற்காடு, துன்னாலைப் பகுதிகளில் - எழுந்தமானமாக, கண்மூடித்தனமாக மண் ஏற்றப்படுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எதுவித தூரநோக்கில்லாது மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, யாழ்.மாவட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் அறிவித்தல் விடுத்திருக்கிறது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் - குறிப்பிட்ட இடங்களில் மணல் அகழ்வு செய்யத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், தவறியோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்.குடாநாடு, வனவளம் பெருமளவில் கொட்டிக்கிடக்கும் பூமியல்ல. அதேவேளை - நிலத்தடி நீரை மட்டுமே நம்பியிருக்கும் பிரதேசமும் கூட.

இந்நிலையில் - கண்மூடித்தனமாக பசுமையான மரங்களை அழிப்பது, கிடைக்கும் மழை வீழ்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு - மண் அகழ்வு போன்ற நடவடிக்கைகள் நிலத்தடி நீர் வளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி, குடாநாட்டை உவர் நிலமாக்கிவிடும் ஆபத்தும் இருப்பதை இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் உணர வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட வளமோடு இருக்கும் குடாநாட்டுப் பிரதேசம் - இதனால் எதிர்காலத்தில் மனித வாழ்க்கைக்கு உகந்த சூழற்தன்மையை இழப்பதோடு - பாலைநிலப் பூமியாகவும் மாறிவிடவும் கூடும்.

எனவே - யுத்தம் தணிந்துள்ள இவ்வேளையிலாவது - அழிந்த, சிதைந்த எம்மண்ணில் எஞ்சியிருக்கும் வளங்களையும் அழித்துவிடும் முட்டாள்தனமான செயற்பாடுகளிலிருந்து எம்மைத் தவிர்த்துக் கொள்வோம்.

உள்ளதை இன்னும் பெருக்கும் ஆக்கப் பணிகளில் சிரத்தை காட்டுவோம்.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் சிவராத்திரி விழா:

அடம்பன் ஊடான மன்னாருக்கான பாதையை திறக்குமாறு திருப்பணிச் சபை வேண்டுகோள்

(மன்னார்)

பூநகரி, அடம்பன் ஊடான மன்னார்ப் பாதையைப் போக்குவரத்துக்கு திறந்துவிடும்படி திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த வாரம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விசுவலிங்கம் தலைமையில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறவிருக்கும் சிவராத்திரி திருவிழா சம்பந்தமாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் செல்லும் பக்தர் நலன் கருதி பூநகரி, அடம்பன் ஊடான மன்னார் பாதை யைத் திறக்கும்படி திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டிருப்பதனால் இம்முறை பக்தர்கள் நாட்டின் பல திசைகளிலிருந்தும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன், இவ்விழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் நலன் கருதி அவர்களுக்கான குடிநீர், சுகாதாரவசதிகளையும், போக்குவரத்து வசதிகள் பற்றியும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

பெப். 15 முதல் தற்காலிகமாக ஏ-9 பாதை மூடப்படுகின்றது

திருத்த வேலைகள் முடியும்வரை மாற்று ஒழுங்குகள்

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் அவசர திருத்தங்களை மேற்கொள்வதற்காக பெப்ரவரி 15 ஆம் திகதி தொடக்கம் தற்காலிகமாக அந்தப் பாதையை மூடிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் திருத்த வேலைகள் முடியும்வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி அடங்கிய வன்னிப் பிரதேசத்தில் இருந்து பிரயாணம் மேற்கொள்ளும் வாகனங்கள் மன்னார் உயிலங்குளச் சோதனைச் சாவடி மூலமே பிரயாணத்தை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செல்லும் வாகனங்கள் பூநகரி - சங்குப்பிட்டி ஊடாகவும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய பகுதிகளுக்கு பள்ளமடுச் சந்தியில் வெள்ளாங்குளப் பாதையூடாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

3பாடங்கள் ஆங்கிலத்தில் மட்டும் போதிக்கப்பட விரைவில் திட்டம்!

ஆண்டு 6 இல் இருந்து 10 வரை நடைமுறையாகும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 168 பாடசாலைகளில் - இந்த ஆண்டு முதல் மூன்று பாடங்களை ஆங்கில வழியாக மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் அமுலாக்கப்படுவதற்கான முயற்சிகளைக் கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளதாக - மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

மலம்பேயில் பாடசாலைக் கட்டடமொன்றைத் திறந்துவைக்கும் நிகழ்வில் பேசிய அவர்,

ஆண்டு ஆறு முதல் ஆண்டு பத்து வரை இம்மூன்று பாடங்களும் ஆங்கிலத்தில் மட்டுமே போதிக்கப்படும் எனக் கூறினார்.

ஆனால் - எந்தெந்தப் பாடங்கள் ஆங்கிலத்தில் மட்டும் போதிக்கத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அவர் வெளியிடவில்லை.

அங்கு அமைச்சர் கொடித்துவக்கு மேலும் பேசும்போது தெரிவித்ததாவது,

வெளிநாடுகளில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் மிகப் பெருமளவில் காத்திருக்கின்றன. ஆனால் - ஆங்கிலத்திலும் வேறு வெளிநாட்டு மொழிகளிலும் தகுந்த திறமையில்லாதவர்களாக இலங்கையர்கள் காணப்படுவதால் - இந்த வேலைவாய்ப்புக்களைப் பயன்படுத்தமுடியாத துரதிஷ்டமான நிலை தோன்றியுள்ளது.

2003 ஆம் ஆண்டிலிருந்து - அடுத்து வரும் 18 மாதங்களுக்கு - ஆங்கிலக் கல்விக்கும், தகவல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிப்பதற்கும் உலகவங்கி நிதியுதவி செய்யத் தயாரென அறிவித்துள்ளது. இத்திட்டங்களுக்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதியுதவியாகக் கிடைக்கவுள்ளது.

அதேவேளை - வட - கிழக்கிலுள்ள போரால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யவும் 1000 மிலலியன் ரூபா நிதியுதவியாகக் கிடைக்கவுள்ளது.

வட - கிழக்கில் எல்லையோரங்களிலுள்ள வட மத்திய மற்றும் ஊவா மாகாணப் பாடசாலைகளுக்கும் இந்த நிதியுதவி பயன்படுத்தப் படும்.

இந்த உதவியின் மூலம் - கட்டடங்கள், நூலகங்கள், கணினி நிலையங்கள் என்பவற்றை அமைக்க முன்னுரிமை வழங்கப் படவுள்ளது என்றும் கூறினார் அமைச்சர் கொடித்துவக்கு.

ஜே.வி.பியுடன் சு.க. இணைந்தால் சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பு

ஏற்படும் என்கிறார் மகிந்த சமரசிங்க

மக்கள் விடுதலை முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து கொண்டால் அது நெருக்கடியானதொரு நிலையைத் தோற்றுவிக்கும் என்று தொழில், தொழில்வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யுத்தம் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென்ற யோசனையை முன்வைக்கும் ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒன்றிணைந்தால், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் பாரிய நெருக்கடிகள் தோன்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விரு கட்சிகளும் இணைந்தால் சமாதான செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் தொழில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மலத்தியோன் பக்கற்றைக் கூட எமக்கு மகேஸ்வரன் வழங்கவில்லை

யாழ். மேயர் செல்லன் கந்தையன் குற்றச்சாட்டு

இந்து கலாசார அமைச்சரான தி.மகேஸ்வரன் இதுவரை யாழ். மாநகரசபைக்கு எந்த உதவியை வழங்கினார்? என மேயர் செல்லன் கந்தையன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். மாநகரசபை நலன்புரிச் சங்கத்தின் 9 ஆவது பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம விருநதினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ். மாநகரசபைக்கு நிதி, ஆளணி, வாகனப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. நான் பதவிக்கு வந்தபின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கும்படி மகேஸ்வரனிடம் கேட்டேன். ஆனால், அவர் இதுவரை ஒரு மலத்தியோன் பக்கற்றைக்கூட தரவில்லை.

யாழ். மாநகரசபையின் சட்ட வரம்பினைமீறி, ஜனநாயக ரீதியற்ற விதத்தில் எந்த முன்னறிவித்தலையும் கொடுக்காமல், கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களை அழைத்து வந்து எமது ஆளுகைக்குட்பட்ட குருநகர்ப் பகுதியைத் திருத்தியமைக்க அமைச்சர் மகேஸ்வரன் கேட்டுள்ளமை எம்மை அவமதிக்கும் செயல் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சமூகம் முழுவதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே கல்வி மட்டத்தை விரும்பியவாறு உயர்த்த முடியும்!

பொருளியல் சிறப்பு பட்டதாரியான அ.குமாரவேல் திட்டமிடல் இலாகாவில் பணிபுரிந்து ஆசிரியத் தொழிலில் கொண்ட ஆர்வம் காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகி, தற்போது அக்கல்லூரியின் பட்டப்படிப்புக்கள் பிரிவின் இணைப்பாளராக உள்ளார். சர்வதேச விடயங்கள் பற்றியும் சமகால அரசியல் பற்றியும் அநேக கருத்தரங்குகளில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். வெளிவாரி பட்டப்படிப்புக்களுக்கான விரிவுரையாளராகக் கடந்த 32 வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றார். பல சமய, சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

குமாரவேல்

கேள்வி: யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் பற்றி இன்றும் பெருமையோடு பலர் பேசிக் கொள்கின்றனர். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் அடிப்படை அம்சங்கள் என்ன?

பதில்: யாழ்ப்பாணச் சமூகத்தின் சொத்து கல்வியே என்ற வகையில் யாழ்ப்பாணத்து மக்கள் அக்கல்விச் சொத்தினை அதிகரிப்பதற்கு முனைப்புடன் செயற்பட்டு வந்தமை யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் அடிப்படையாகும். தென்னிலங்கையைச் சேர்ந்த பலர் யாழ்ப்பாணத்தல் கல்வி கற்க ஒரு காலத்தில் திரளாக வந்தனர். அது எமது கல்விப் பாரம்பரியத்தின் பழமையையும் பெருமையையும் சுட்டிக்காட்டும் வரலாற்றுப் பதிவாகும். இத்தகையை பாரம்பரியத்துக்கு அடிப்படையாக இருந்தவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆவர். இவர்களுக்கிடையே ஒரு நெருக்கமான கல்வி உறவு இருந்தது. கற்பித்தலுக்காகத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்களும், கற்றலுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் மாணவர்களும், பிள்ளைகளின் கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்த பெற்றோரும் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைக் கட்டி எழுப்பினர். ஒழுக்கத்திற்கு உயர்ந்த இடத்தை வழங்கியமை யாழ்ப்பாணக் கல்வியின் பெருமைகளில் ஒன்றாக இருந்தது. மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் சில நாட்கள் வராது இருந்து விட்டால், ஆசிரியர் அம்மாணவனின் வீட்டுக்குச்சென்று ஏன் வரவில்லை என அறிந்து அதற்கு பரிகாரம் காணும் வழியையும் பெற்றோருக்குச் சொல்லிக் கொடுத்த அந்தக் காலமே யாழ்ப்பாணத்துக் கல்வியின் பொற்காலம் ஆகும். இந்தக் கல்வி உறவு கல்விப் பாரம்பரியத்தின் இறுக்கத்தன்மைக்கு ஏதுவாக அமைந்தது.

கேள்வி: யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து விட்டது என்று பலர் கவலையோடு கூறுகின்றனர். ஒரு காலத்தில் புகழ் பெற்றிருந்த யாழ்ப்பாணக் கல்வித் தரம்

இந்த நிலைக்கு வந்ததேன்?

பதில்: யாழ்ப்பாணத்தின் கல்வித் தரம் வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்பதைப் புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. கல்வித்தரம் என்பது பல்கலைக்கழக அனுமதியை வைத்துக்கொண்டு அளவிட முடியாததெனினும், அவையே இன்று முதற்தர அளவு கோல்களாக உள்ளன. ஒரு காலத்தில் (1970க்கு முன்) திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகத் தெரிவில் சில குறிப்பிட்ட துறைகளில் உதாரணமாக - மருத்துவம், பொறியியல் துறைகளில் தமிழ் மாணவர்களே அதிகமாகத் தெரிவு செய்யப்பட்டனர். மொழி வாரியான தரப்படுத்தல், மாவட்ட ரீதியான தெரிவு போன்றவை. அமுல் செய்யப்பட்டபோது அதற்கெதிராக யாழ்ப்பாணச் சமூகம் பொங்கி எழுந்தது. முழுத்தெரிவும் இனிமேல் திறமையின் அடிப்படையில்தான் என மீண்டும் ஒரு திட்டம் கொண்டுவந்தால் அதனை வேண்டாம் என்று எதிர்க்க வேண்டியநிலையில் யாழ்ப்பாணம் உள்ளது. இந்த வகையில் கல்வித் தரம் வீழ்ச்சி கண்டுள்ளமை எமது பழம் பெருமை எல்லாவற்றையும் சிதைத்துவிட்டது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

தற்போது நிரந்தரமற்ற ஒரு சிறு அமைதி உண்டெனினும் கடந்த 20 வருடகால யுத்தத்தின் கோரத்தாண்ட்வம் கல்வியின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு காரணி என்பதை எவரும் மறக்க முடியாது. யாழ்ப்பாணத்துக்குச் சராசரி மனிதன் உளநெருக்குதல்கள், மன அழுத்தங்கள் ஆகியவற்றில் இருந்து இன்னும் விடுபடவில்லை. வெறுப்புமயமான ஒரு பார்வை வாழ்க்கையிலிருந்து வந்தது. விரக்தியடைந்த மாணவர்கள், அவர்களை வழிநடத்த முடியாத ஆசிரியர்கள், போரின் அவலங்களினால் ஏற்பட்ட இருள் மயமான வீட்டுச் சூழல், இருள் சூழ்ந்த எதிர்காலம் இவை எல்லாம் ஒன்றிணைந்த வகையில் சமூகத்தை நெருக்குதல்களுக்குள்ளாக்கியது. இடப்பெயர்வுகள், பாடசாலை அழிவுகள், அகதி முகாம் வாழ்க்கை இவையெல்லாம் கற்றல் '- கற்பித்தல் சூழ்நிலைகளை வெகுவாகப் பாதிப்பவை. மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அரசாங்கம் தமிழ்ப் பிரதேசக் கல்வியின் மீது கொண்ட பார்வை மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. விடுதலைப் போரின்போது சமூகம் அதிகமாகப் பாதுகாக்க வேண்டியது கல்வியைத் தான். இந்த யுத்த சூழ்நிலை மட்டும் தான் கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணம் அல்ல.

இன்று கல்வி நிர்வாகம் சீரழிந்து விட்டது என்றே கொள்ளுதல் வேண்டும். அங்கு ஊழல்கள் அதிகரித்து விட்டன. பதவி மோகம் உச்சத்துக்குச் சென்றுவிட்டது. அரசியல்வாதிகளை வால் பிடித்துத் திரியும் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகளைக் காணமுடி கின்றது. ஆசிரியர் ஒருவர் மேலும், மேலும் படிக்கிறார் என்றால் அது பதவியைப் பெறவும், கதிரையைப் பிடிக்கவும், சம்பளப்படி வரிசையில் உயர்ந்த நிலைக்குச் செல்லவுமேயொழிய, தான் பெற்ற அறிவை மாணவனுக்கு வழங்கவல்ல என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மையாக அமைகின்றது. சிலர் இதனை மறுக்கலாம். எனினும், இதயசுத்தியோடான மறுப்பாக அது இருக்க மாட்டாது.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோருக்கிடையே ஒரு நெருங்கிய உறவிருக்கும் நிலையிலேதான் கல்வி மேம்பாடு அடையும். பெற்றோர் கல்வியில் கொண்டுள்ள ஆர்வம் கணிசமாகக் குறைந்துள்ளது. ஆர்வம் கொண்ட பலர் மாணவனுக்குக் கல்வியை அவனது இயல்புமீறித் திணிக்கின்ற நிலை காணப்படுகிறது. புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவரைக் கெடுக்கும் பெற்றோர் பலர் உள்ளனர். மாணவர் சக்தி தவறான முறையில் பயன்படுத்தப்படும் அவலமும் அதிகரித்துவிட்டது. மாணவர்களின் ஒழுக்கப் பண்பும் சிதைந்து விட்டது. ஆசிரியர்களுக்கும் குறைபாடுகள் உள்ளன. அது நிவர்த்தி செய்யப்படாவிட்டால் பூரண ஆற்றலை ஆசிரியரிடம் இருந்து பெற்று விடமுடியாது. சமூகம் முழுவதும் மீண்டும் அர்ப்பணிப்போடு செயற் பட முனைந்தால் ஒழிய கல்வித் தரத்தை விரும்பிய மட்டத்துக்கு உயர்த்த முடியாது.

(வரும் வெள்ளியன்று தொடரும்)

சந்திப்பு: **எஸ். சாந்தகுமார்**



நமது ஈழநாடு வழங்கும்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **RATNAGOPALS இரத்தினகோபால்ஸ்**

63, 65, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்டாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை நிரப்பி, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ....

வயது: ....

முகவரி: ....

....

சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

ஆஷிஷ் பகாய்

பிறந்தது:- 26.01.1982 டெல்கி இந்தியா.
அணிகள்:- கனடா.
சுருக்கப்பெயர்:- ஆஷிஷ் பகாய்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர்

கனடிய எதிர்காலக் கிரிக் கெட்டின் நம்பிக்கை நட்சத்திரம். பல இளைஞர் சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியவர். 2001ல் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு தகுதி பெற்ற கனடிய அணியில் தவிர்க்க முடியாத படியான ஒரு வீரர். மிக நிதானமாக தான் விரும்பும் பகுதிக்குப் பந்தைச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவர். ICC கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸை இறுதி ஓவரில் வெல்வதற்கு இவரே காரணமாக இருந்தார். தனது வயதிற்கும் அப்பாலான திறமை கொண்டவர். அமெரிக்காஸ் அணியின் 19 வயதிற்குட்பட்ட அணித் தலைவராக இருந்தவர்.

இயன் ஷோ பில்கிளிவ்



பிறந்தது:- 26.10.1972 பிரிட்டிஷ் கொலம்பியா
அணிகள்:- ஒட்டாகோ, ஆக்லண்ட், வெலிங்டன், கனடா
சுருக்கமாக:- இயன் பில்கிளிவ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.

இவரது கிரிக்கெட் வாழ்க்கை நியூசிலாந்துடன் பின்னிப் பிணைந்தது. பிறந்தது கனடாவில். வளர்ந்தது ஒட்டாகோ நியூசிலாந்தில். 90/91ல் ஒட்டாகோவிற்கான அணியில் கிரிக்கெட் பிரவேசம். நியூசிலாந்தின் உள்ளூர் சுற்றுப் போட்டிகளில் நிறையப் பங்கேற்பு. 1994ல் ஒட்டோகாவிற்காக ஒரு சதம் போட்டார். இங்கிலாந்தில் பிளக்பேர்ண் நோதர்ன் மற்றும் கழகங்களில் கிரிக்கெட் ஆடியவர். இவர் கனடாவில் பிறந்தது, திறமையோடு கனடிய அணியில் இடம் பெற வாய்ப்பானது. 2001 ICC அணியில் ஒரு வீரர். 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் முக்கிய இடம். குறிப்பிடத்தக்க சகலதுறை விளையாட்டு வீரர் இவர்.

டெஸ்மண்ட் சம்னி

பிறந்தது:- 8.1.1968 சென் கிட்ஸ் (கரிபியன்)
அணிகள்:- கனடா
சுருக்கமாக:- டெஸ்மண்ட் சம்னி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை OFF BREAK சுழற்பந்து வீச்சாளர்.

கரிபியனில் பிறந்து கனடாவில் வாழும் வீரர் இவர், மேல்வரிசை அதிரடி ஆட்டக்காரர். 1997 ICC கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர். 2000 ஆம் ஆண்டு **RED STRIPE BOWL** சுற்றுப் போட்டியில் டிரினிடாட் டுபாகோவிற்கு எதிராக 58 ரன்கள் குவித்தவர். 2001ல் இவரின் பங்களிப்பு ஸ்கொட்லாந்தை வெல்ல உதவியது. அது கனடாவை உலகக் கிண்ணத்துக்குக் கொண்டு வந்தது. இவர் வோர்க ஷயருக்கு எதிராக 113 ஓட்டங்கள் பெற்றவர். கனடாவின் விக்டோரியா பார்க் CC கழகத்துக்காக விளையாடி வருபவர்.

ஒஸ்ரின் கொட்ரிங்டன்

பிறந்தது:- 22.8.1975 ஜமெய்க்கா (கரிபியன்)
அணிகள்:- கனடா
சுருக்கமாக:- ஒஸ்ரின் கொட்ரிங்டன்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.

2000 ஆம் ஆண்டில் கனடிய தேசிய அணியில் இடம் பிடித்தார். கீழ்வரிசை அதிரடித் துடுப்பாட்ட வீரர். எல்லா நிலைகளிலும் பந்து தடுப்பதில் வல்லவர். படிப்படியாக வளர்ந்து வரும் வீரர். நமீபிய ICC கிண்ணப் போட்டிகள் மற்றும் 2001/2002 **RED STRIPE BOWL** ஆட்டங்களில் சிறப்பாக விளையாடியவர். ஓவர்சீஸ் CC அணிக்காக கனடாவில் விளையாடுபவர்.

ஜோன் மைக்கல் டேவிசன்



பிறந்தது :- 9.5.1970 பிரிட்டிஷ் கொலம்பியா (கனடா)
அணிகள்:- கனடா, தென் அவுஸ்திரேலியா, விக்டோரியா (அவுஸ்.)
சுருக்கமாக:- ஜோன் டேவிசன்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை **OFF BREAK.**

கனடாவில் பிறந்த இவர் அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தார். விக்டோரியா அணியில் இடைக்கிடையே விளையாடியவர். 1999ல் கனடாவில் கழக வீரராகவும் பயிற்றுனராகவும் தன்னை நிலை நிறுத்திக்கொண்டார். பின்னர் தேசிய அணியில் இடம் பிடித்துக்கொண்டார். 2003 உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்ற ICC கிண்ண கனடிய அணியின் வீரர் (2001). 2002/2003 இல் அவுஸ்திரேலிய, தென் அவுஸ்திரேலிய அணிகளுக்காக விளையாடப் போகிறவர். சிறந்த களத்தடுப்பு வீரர்.

நிக்கலஸ் அலெக்சாண்டர் டீ குரூட்

பிறந்தது:- 22.10.1975 கனடா
அணிகள்:- கயானா- கனடா
சுருக்கமாக:- நிக் டீ குரூட்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர்.

கனடாவில் பிறந்த இவர் கயானா நாட்டில் கிரிக்கெட் பயின்றவர். 94/95இல் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக கயானாவிற்காக 19 வயதில் விளையாடியவர். மேற்கிந்திய இளைஞர் அணியின் வீரரும், கயானாவின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமாகத் திகழ்ந்தவர். 2001 இல் ICC கிண்ணத்துக்கான கனடா அணியில் விளையாடியவர். இது கனடிய தேசிய அணியின் நிரந்தர வீரராக்கியது. மிகச்சிறந்த களத்தடுப்பாளர். அதிரடித் துடுப்பாட்ட வீரர்.

ஜோசப் விக்ரம் ஹரிஸ்

பிறந்தது:- 16-08-1965 (சென்னை, இந்தியா)
அணிகள்:- பார்படோஸ், கனடா
சுருக்கமாக:- ஜோசப் ஹரிஸ் (அணித்தலைவர்)
வலதுகைத்துடுப்பாட்ட வீரர், வலதுகை **OFF BREAK** சுழல் பந்து வீச்சாளர்.

சர்வதேசத்தரம் வாய்ந்தவர். பார்படோஸ் (கரிபியன்) அணிக்காக விளையாடினாலும் சோபிக்க முடியவில்லை. கனடாவிற்கு மீளவும் செல்லல். தற்போது கனடாவின் கப்ரன். அமெரிக்காஸ் கிண்ண சுற்றுப் போட்டியில் ஆட்டத் தொடர் நாயகன்(2000) - ICC கிண்ண 2001 அணியின் தலைவர். மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர். திறமையான பந்து வீச்சாளர்.

நிக்கலஸ் இ஼பில்



பிறந்தது:- 24.11.1968 பார்படோஸ் (கரிபியன்)
அணிகள்:- கனடா, விக்ரோரியா பார்க் CC கழகம்.
சுருக்கமாக:- நிக்கலஸ் இ஼பில்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.

மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர், சகல துறை வீரர். 1988/89 இல் ICC 19 வயதிற்குட்பட்ட இணைந்த அணியில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக விளையாடியவர். கனடிய அணிக்காக போர்ட்டோவிற்கு எதிராக 3 விக்கெட்டுக்கள் சரித்து 78 ஓட்டங்களும் பெற்றவர்.

டேவிஸ் ஜோசப்

பிறந்தது:- 31.07.1963 கிரெனடா
அணிகள்:- கனடா
சுருக்கமாக:- டேவிஸ் ஜோசப்
வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.

கனடிய அணியின் முக்கிய வீரர். 4 ICC சுற்றுப் போட்டிகளில் 32 விக்கெட் பெற்றவர். ஆரம்பப் பந்துவீச்சாளர். 2001 ICC அணியின் அங்கத்தவர். ரெட்ஸ்கைப் போல் பந்தயமொன்றில் (2000) ஜமெய்க்காவுக்கு எதிராக 6/39 என்ற பந்துவீச்சுப் பெருமை கொண்டவர். கொமன்வெல்த் போட்டிகளில் இரண்டு ஓட்டங்களுக்கு சச்சினை இலக்குச் சரித்து அவுட்டாக்கியவர்.

ஈஸ்வர் மராஜ்

பிறந்தது: 26.1.1969 டிரினிடாட்
*அணிகள்:*கனடா
சுருக்கமாக: ஈஸ்வர் மராஜ்.
இடதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை OFF BREAK.

மேல்வரிசை துடுப்பாட்ட வீரர். வேகமாக ரன் சேர்ப்பவர். கனடாவிற்கு வரமுன் டிரினிடாட்டில் கழக அணிக்கு விளையாடியவர். இங்கிலாந்திலும் பயிற்றுவித்தவர், விளையாடியவர். 2001 ICC போட்டிகளில் 3 அரைச்சதங்கள் பெற்றவர். ஓவர்சீஸ் CC (கனடா) இன் தலைவர்.

ஆஷிஷ் பட்டேல்

பிறந்தது:- 31.7.1975
அணிகள்:- கனடா
சுருக்கமாக:- ஆஷிஷ் பட்டேல்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப்பந்துவீச்சாளர்.

நேர்த்தியான பந்துவீச்சாளர். இவர் கியூபெக் மாகாணத்தில் இருந்து தெரிவானது ஒரு சிறப்பு. 2001/2002ல அமெரிக்காஸ் கிண்ண ஆட்டங்களில் கிடைத்த இடத்தைத் தக்கவைத்த திறமைசாலி. ஐக்கிய அமெரிக்காவிற்கு எதிராக 7 விக்கெட் சாய்த்தவர் 6 நாடுகள் சுற்றுப் போட்டியில் கென்ய வீரர்கள் டிக்கோலோ, ஒடும்பே ஆகியோரை வீழ்த்தியவர்.

அப்துல் பாசில் சத்தார்

பிறந்தது:- 6.4.1965 கயானா.
அணிகள்: பேர்பைஸ்-கயானா-கனடா.
சுருக்கமாக: பாசில் சத்தார்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட் காப்பாளர்.

மேல்வரிசை துடுப்பாட்ட வீரர். முதற்தர கிரிக்கெட் அனுபவம் மிக்க சிலருள் இவரும் ஒருவர். 2001 அமெரிக்காஸ் கிண்ண சுற்றுப்போட்டிகளில் கனடாவின் அதி கூடுதல் மொத்த ரன பெற்றவர். கனடிய கழகப் போட்டிகளில் நான்கு சதம உட்பட 1000 ஓட்டங்கள் பெற்றவர்.

அப்துல் முடாசார் சமத்

பிறந்தது:- 03-05-1979 கயானா(கரிபியன்)
அணிகள்:- கனடா.
சுருக்கமாக:- அப்துல் சமத்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை **OFF BREAK,** விக்கெட் காப்பாளர்.

சிறந்த சகல துறை ஆட்டக்காரர். 19 வயதிற்குட்பட்ட பிரிவில் கனடாவிற்காக விளையாடியவர். 2000 இல் தேசிய அணியில் இணைந்தவர். தேசிய அணியின் பாஸா சமதின் இளைய சகோதரர். 2002 இல் கழக அணியில் 140 ஓட்டங்கள் பெற்றவர்.

பாரி பென்ஜமின் சீபாரன்

பிறந்தது:- 12.09.1972. பிரிட்டிஷ் கொலம்பியா (கனடா)
*அணிகள் :-*சவுத் ஒஸ்ரோலியா கவுண்ட்ரி-கனடா.
சுருக்கமாக:- பாரிசீபா ரன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், இடதுகை மெதுவான **ORTH ODOX.**

16 வயதில் மேற்கிந்திய **(A)** அணிக்கு எதிராக கனடாவிற்காக விளையாடியவர் (1989). 1990 இல் **ICC** கிண்ண அணியின் அங்கத்தவர். சுற்றுப்போட்டியின் சிறந்த சுழல் பந்து வீரன். 1990 இல் இருந்து **ICC** ஆட்டங்களில் நிரந்தர அணி உறுப்பினர்.

சஞ்சயன் துரைசிங்கம்

பிறந்தது: 11.09.1969 கொழும்பு (இலங்கை)
அணிகள்: கனடா.
சுருக்கமாக: சஞ்சயன், துரை சிங்கம்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலது கை மித வேகப் பந்து வீச்சாளர்.

கட்டுமஸ்தான தேகம் கொண்ட இவர், சிறந்த பந்து வீச்சாளர் . 2001 **ICC** சுற்றுப் போட்டியில் கனடாவிற்காக கூடுதலான விக்கெட் பெற்றவர். சிறந்த பந்துவீச்சுச் சராசரி- 5/25 எதிர் ஸ்கொட்லாந்து. கீழ் வரிசை அதிரடி ஆட்டக்காரர். கொமன்வெல்த் ஆட்டங்களில் அடம் கில்கிரிஸ்ட்டை ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்கச் செய்தவர். இன்னொரு ஆட்டத்தில் டெண்டுல்கர் மற்றும் கோடா இருவருக்கும் பந்து வீசி நான்கு ஓவர்களில் 5 ரன் மட்டும் கொடுத்தவர்.

தினமும் ஒரு வினா

உலக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் முதல் மூன்று தொடர்களுக்கும் (1975, 1979, 1983) நிதி அனுசரணை வழங்கியவர்கள் யார்?

புருடென்ஷல் காப்புறுதி நிறுவனம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

அடக்குமுறையால் ஆயுதம் ஏந்தினோம்; யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை

நினைவுத்தூபி திறப்புவிழாவில் தளபதி ரமேஸ்

தமிழ் மக்கள் பல இழப்புக்களை சந்தித்த போதிலும், விட்டுக் கொடுப்புக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கினறோம். சமாதான முயற்சிகளை விரும்பாத விஷமிகளே திட்டமிட்ட ரீதியில் பழியை சுமத்தி வருகின்றனர்.

போரை நாங்கள் விரும்பவில்லை. எம்மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டதாலேயே நாங்கள் ஆயுதம் ஏந்தினோம். மீண்டும் எம்மீது போர் தொடுக்கப்பட்டால் எமது பலத்தை நாங்கள் காட்டத் தவறமாட்டோம் என விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு இறால் பண்ணையில் 1987 ஜனவரி 28 ஆம் திகதி 89 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட 16 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வும் நினைவுத்தூபி திறப்பு விழாவும் நேற்று மகிழடித்தீவு சந்தியில் இடம்பெற்றது.

படுவான்கரைப் பிரதேச அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் கவிஞர் தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், தமிழீழ தேசியக் கொடியை 'சிறப்புத் தளபதி ரமேஸ் ஏற்றிவைத்தார்.

நினைவுத் தூபியினை சிறப்புத் தளபதி நாகேஸ், மாவடி முன்மாரி கோட்ட அரசியற் பொறுப்பாளர் சச்சு மாஸ்ரர், கிருஷன், மூத்த தளபதி கரிகாலன், நிதிப்பொறுப்பாளர் சுகி ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

சிறப்புத் தளபதி ரமேஸ் தொடர்ந்து உரையாற்றுகையில், சிங்கள மக்கள் எங்கள் எதிரிகளல்லர். நாங்கள் சிங்களப் பிரதேசத்திற்குச் சென்று அவர்களின் பாரம்பரிய நிலங்களை அபகரிக்கவில்லை. அவர்கள்தான் எங்கள் பிரதேசத்திற்கு வந்து அடக்குமுறைகளை மேற்கொள்ளுகிறார்கள்.

நாங்கள் இராணுவ ரீதியில் ப[illegible] மடைந்த பின்தான் இத்தகைய ப[illegible] கொலைகளை தடுக்க முடிந்தது எதிர்காலத்திலும் தமிழர் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் தமிழர்படை பலமாக இருக்கவேண்டும்.

- என்றார்.

ஒஸ்லோ மாநாட்டில் புலிகளால் எம் பிரசாரம் வலுவிழந்துவிட்டது!

ஜனாதிபதி சந்திரிகா ஆதங்கம்

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகளைப் பங்குபற்ற ஐ.தே.க அரசாங்கம் அனுமதித்ததால், தனது அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொண்ட பிரசாரம் பெரிதும் வலுவிழந்து போய் விட்டதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விளக்கக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.நாளையும் நாளை மறுதினமும் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள விவாதத்தின்போது இதனை நாடாளுமன்றத்தில் விவாதிக்கும்படியும் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (01)

வெளிநாடுகளிலிருந்து அகதிகள் சுயவிருப்பிலேயே திரும்ப வேண்டும்

கட்டாயப்படுத்தக்கூடாது என்கிறது யு.என்.எச்.சி.ஆர்.

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து ஈழத் தமிழ் அகதிகள் மீளவும் திரும்புதல் அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும் என அகதி களுக்கான ஐ.நா. தூதுவராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) அறிவித்துள்ளது.

உலகில் எந்த நாடும் ஈழத்தமிழர்கள் தாம் விரும்பாமல் அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாது அகதிகளாக உள்ளவர்கள் நாடு திரும்புவதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பதோடு, கௌரவமாக நாடு திரும்புவதற்கான சூழல் இன்னும் உருவாகவில்லை.

அகதிகளைத் திருப்பி அனுப்ப விரும்புகின்ற எந்த அரசாங்கமும், இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டபின்னரே அதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். தம்பாட்டில் அகதிகளைத் திருப்பி அனுப்புகின்ற முயற்சிகளில் ஈடுபடக்கூடாது எனத் தெரிவித்துள்ள யு.என். எச்.சி.ஆர், இலங்கைக்குத் திரும்ப விருப்பம் தெரிவிக்கின்ற அகதிகள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளது.

மட்டு...

கைப்பற்றி மட்டக்களப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸாரின் இச்செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியர்களும் நேற்றுக் காலை 8 மணியிலிருந்து ஒரு மணிவரை பகிஷ்கரிப்புப் போராட்டம் நடாத்தினர். அதன்பின்னர், நேற்று மாலை மீண்டும் அந்தப் பலகையை பொதுமக்களும் பல்கலைக்கழக சமூகத்தினரும் இணைந்து அதே இடத்தில் நிறுவினர். (06)

பிரிட்டிஷ்...

உறுதி கூறியுள்ளதாக பிரிட்டிஷ் தூதரகம் அறிவித்துள்ளது.

இருபது வருட காலமாக இருந்து வரும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஆக்கபூர்வமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி யதற்காக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பாராட்டப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளதாக பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

புலிகளின் செயலகத்துக்கு நிதி செய்தியை மறுக்கிறது ஜப்பான்

புலிகளின் செயலகத்துக்கு ஜப்பானிய அரசாங்கம் 35 மில்லியன் ரூபாவை வழங்கியதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் நிராகரித்துள்ளது.

'பயங்கரவாதத்துக்கு வழங்கப்பட்டதான நிதி' என்ற தலைப்பில் அப்பத்திரிகை ஞாயிறு வெளியீட்டில் இச்செய்தியை பிரசுரித்திருந்தது. இதனை நிராகரித்துள்ள ஜப்பானியத் தூதரகம், வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில்தான் - கிளிநொச்சியில் உள்ள வட-கிழக்கு உடனடிப் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகமான சிறானுக்கு 35.23 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இது அரசாங்கத்துக்கான நிதியுதவியாக மட்டுமல்லாது ஜப்பானின் உணவு உற்பத்திக்கான உதவித் திட்டத்தின் கீழான உதவியுமாகும்.

அரசும், புலிகளும் இணைந்து உருவாக்கிய செயலகமே சிறான் அலுவலகமாகும். இதற்கே ஜப்பானிய நிதியுதவி வழங்கப்பட்டது. இது குறித்த மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நம்பியாரின் யோசனை...

தையே தோற்றுவிக்கின்றன.

மோதல் தணிவும் சுமுக நிலையும், இராணுவ வல்லமையை அகற்றுவதாகவும், இயங்கு தன்மையை நிறுத்துவதாகவும் திரிபுபடுத்தப்படுகின்றன.

எமது பார்வையில் மோதல் தணிவும், சுமுக நிலையும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட விடயங்கள். மோதல் தணிவென்பதன் மூலமாக படிப்படியாக, கட்டங்கட்டமாக பொதுமக்களது வாழ்விடங்களிலிருக்கும் இராணுவ பிரசன்னத்தால் எழுந்துள்ள பதற்றநிலையைத் தணிப்பதையே நாம் கருதுகின்றோம்.

இப்பதற்ற நிலையானது, தமது வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் திரும்ப முடியாது தடுக்கப்பட்டிருக்கும இலட்சக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களிடையே அமைதியின்மையை அதிகரித்திருக்கின்றது.

சுமுகநிலை என்னும்போது - சுதந்திரமான, தடுக்கப்படாத வகையிலான நடமாட்டத்தையே குறிக்கிறது. இவையெல்லாம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவையே.

இராணுவத்தினரின் முகாம்களை குலைக்கும்படியோ அல்லது படையினரின் எண்ணிக்கை, இராணுவ வல்லமையை குறைக்குமாறோ விடுதலைப் புலிகள் கோரவில்லை.

எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப விடுங்கள் என்றே நாம் அரசாங்கத்தைக் கேட்கின்றோம். இது எமது மக்களின மறுக்கமுடியாத உரிமை. அமைதிக் காலத்தில் அகதிகளும், இடம்பெயர்ந்தோரும் தமது வீடுகளுக்குத் திரும்ப 'முடியாது தடுப்பதானது மனித உரிமைகளை மீறுவதாகும்.

இந்த மனிதாபிமானப் பிரச்சினையை சதீஸ் நம்பியார் இராணுவச் சமநிலையுடன் தொடர்புபடுத்தும் தன்மை - யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகவினதும், கண்காணிப்புக் குழுத் தலைவர் புறூவ ஹொவ்டேயினதும் அறிக்கைகளில் எதிரொலிப்பதனைக காணமுடிகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் யாழ். குடாநாட்டிலுள்ள தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவதற்கு, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு வன்னிக் காடுகளுக்குள், தங்களது பாசறைகளுக்குள் முடங்குமாறு கோருவது தர்க்க நியாயமற்றது; அபத்தமானது.

உயர் பாதுகாப்பு வலயங்களை மீளமைத்து - இடம்பெயர்ந்தோர் மீணடும் தமது இடங்களுக்குத் திரும்ப உதவுவது அரசினது முக்கியமான கடமையாகும்.

தனது தந்திரோபாய பாதுகாப்பு விடயங்களுக்கு கஷ்டம் தராமல் இருக்க, எந்த சர்வதேச நிபுணர்களினதும் ஆலோசனையை இலங்கை பெற முடியும்.

ஆனால், அகதிகள் மீளக்குடியமர்வதற்கு, விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற எந்தவொரு சிபாரிசினையும் விடுதலைப் புலிகள் மிகத் தீவிரமாக எதிர்ப்பதுடன் அவை அனைத்தையும் நிராகரிக்கின்றனர் என்றார் அன்ரன் பாலசிங்கம்.

இதேவேளை, சதீஸ் நம்பியாரின முழு விபரங்களும் அடங்கிய அறிக்கை, இதேபோன்றதான கடுமையான நிபந்தனைகளும் விதிகளும உள்ளடங்கியதாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படுமாக இருந்தால், எனக் கேட்கப்பட்டபோது - அதுபற்றி எத்தகைய கலந்துரையாடலும் தேவையற்றது என்பதுடன் அது நிச்சயம் நிராகரிக்கப்படும் எனவும் பதிலளித்தார் அன்ரன் பாலசிங்கம்.

தமிழ் மக்களுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளின் கடுமையான, தீவிரமான நிலைப்பாட்டையும் அர்ப்பணிப்பையும் - இந்திய அமைதி காக்கும் படையினர் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் ஜெனரல் நம்பியார் பரந்த அனுபவத்தைப் பெற்றிருப்பார்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முன்பு, விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் கையளிக்குமாறு நியாயமற்ற வகையில் கோரியதன் பின்னர், இந்திய இராணுவத்திற்கு எதிராக விடுதலைப புலிகள் மேற்கொண்ட கடுமையான, இரத்தம் தோய்ந்த கெரில்லாப் போரினை சதீஸ் நம்பியார் நிச்சயம் உணர்ந்திருப்பார்.

இந்தவகையில் - சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு வலைக்குள் சிக்கியிருக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் மனிதாபிமான நிலையையும் விடுதலைப் புலிகள் அம்மக்களுக்கான விடுதலை இயக்கம் என்பதையும் கருத்திற்கொண்டு, உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்ற விவகாரத்தை கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இந்திய ஜெனரல் அணுகுவார்; அணுக வேண்டியது அவசியம் என்று கூறிய பாலசிங்கம்,

விடுதலைப் புலிகளினது தந்திரோபாய சமநிலையை பாதிக்கும் நியாயமற்ற எந்தவொரு சிபார்சையும் விடுதலைப் புலிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என உறுதியாகத் தெரிவித்தார்.

கொக்கிளாய் கடற்பரப்பில் சிங்கள மீனவர் அட்டகாசம்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவரை அங்கு வந்த சிங்கள மீனவர்கள் தாக்கியதுடன், அவர்களது தொழில் உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. அளம்பிலை வதிவிடமாகக் கொண்ட சின்னராசா சம்மாட்டியார் அடைக்கலம் (30 வயது),கனகலிங்கம் (35 வயது) ஆகிய இருவரும் படகில் மீன்பிடிக்கச்சென்றபோது, அங்கு ஆறு படகுகளில் வந்த சிங்கள மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டதுடன் கடலில் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

தமிழ் மீனவர்களின் படகுகளில் இருந்த மீன்பிடி உபகரணங்களையும் சிங்கள மீனவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

நெருக்கடி...

இந்தப்பிரச்சினைகளில் கண்காணிப்புக்குழுவுக்குப் புலிகள் பூரணமான ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜெனரல் புறூவ் ஹொவ்டே கிளிநொச்சியில் இருந்து நேற்று மாலை விமானப்படை ஹெலி மூலம் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்[illegible] வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

	கொள்வனவு விலை (ரூ.ச.)	விற்பனை விலை (ரூ.ச.)
1 அமெரிக்க டொலர்	96.53	96.96
1 ஸ்ரேலிங் பவுண்	157.46	158.80
1 யூரோ	104.28	105.46
1 சுவிஸ் பிராங்	70.89	72.03
1 அவுஸ்திரேலிய டொலர்	56.50	57.47
1 ஜப்பானிய யென்	00.81	00.82
1 சவூதி றியால்	25.81	25.81

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.